**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**D041 மொழி வரலாறு – 2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மொழியில் எழுத்துகள் எதன் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும்?
2. 10 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் எழுத்துகள் எவ்வாறு எழுதப்பட்டன?
3. சொல்லெழுத்துகளில் ஏற்பட்ட மாற்றத்தை நேரடியாகக் கூறிய இலக்கண நூல் எது?
4. பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது இடையில் வருவது எது?
5. பெயரடை பழந்தமிழில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
6. சுட்டெழுத்துகள் எவை?
7. வேற்றுமை எத்தனை?
8. தற்கால மொழியியலார் இலக்கணக் கூறு என்று எதனை அழைப்பார்?
9. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற நூல் எது?
10. திராவிட மொழியிலிருந்தே தமிழ் பிரிந்தது எனக் கூறியவர் யார்?
11. இதழ் குவியில் பிறக்கும் உயிரெழுத்துகள் எவை?

12. வெடிப்பொலிகள் எவை?
13. உடம்படு மெய்யின் வேறு பெயர் யாது?
14. கிளைமொழியைத் தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?
15. கிழக்குக் கிளை மொழியில் சகரம் வகரமாக ஒலிப்பதற்குச் சான்று தருக

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. மீக்கூற்று ஒலியன் என்றால் என்ன?
2. எழுத்தாக்கம் என்பதன் பொருள் யாது?
3. புணர்ச்சி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?அவை யாவை?
4. பதிலிடுபெயர்கள் என எவற்றை அழைக்கிறோம்?
5. சொல்லுருபு என்றால் என்ன? சான்று தருக.
6. சொற்பொருளியல் அணுகுமுறைகள் எத்தனை? அவை யாவை?
7. கூட்டொலி என்றால் என்ன? சான்று தருக,
8. உடம்படு மெய் என்றால் என்ன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மொழி மாற்றம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உடம்படுமெய் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) பதிலிடு பெயர்களின் வகைபாடுகளை விவரி.

(அல்லது)

(ஆ) வேற்றுமை குறித்துக் கட்டுரைக்க.

3. (அ) தற்காலச் சொல்லுருபுகள் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) சொற்பொருள் மாற்றம் குறித்துக் கட்டுரை வரைக.

***